*Registered as a Newspaper in Sri Lanka No. A 13*

# ஐக்கிய தீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர் : 30
இதழ் : 3
கார்த்திகை 1974

யாழ்ப்பாணம்

## இந்த இதழில்....

○ ஆசிரியர் தலையங்கம்

○ பிக்ஸ் சேமிப்புத் திட்டத்தில் தொழிலாளர் நம்பிக்கை இழந்ததேன் ?

○ இலங்கைக் கூட்டுறவு இயக்கம் : தோற்றுவாயும் வளர்ச்சியும்

○ கூட்டுறவுக் கைத்தொழில்கள்

○ விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதில் அரசாங்கத்தின் பங்கு

○ Government's Role in the Marketing of Agricultural Produce & its Support to Marketing Coops.

# ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மலர் 10 || யாழ்ப்பாணம், கார்த்திகை 1974 || இதழ் 3

## கூட்டுறவே மார்க்கம்

எந்தவொரு தொழிலையும் கூட்டுறவு அடிப்படையிலே வெற்றிகரமாக நடாத்த முடியும் என்பதற்கு யாழ் மாவட்டத்தில் இயங்கிவரும் கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் சான்று பகரும். புனித இயக்கமாகிய கூட்டுறவு இயக்கம் மது விற்பனையில் ஈடுபடலாமா என அறவொழுக்கவாதிகள் வினவலாம். ஆனால், பாரம்பரிய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை சுரண்டலிலிருந்து காப்பாற்றுவதற்கு கூட்டுறவு இயக்கம் ஒன்றே மார்க்கம் என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக யாழ் மாவட்டத்தில் நடைமுறையிலிருந்து வந்த மரவரி முறை 1972ம் ஆண்டு மே தினத்தன்று நீக்கப்பட்டது.

இதனை எதிர்த்து மரவரி முறையால் நன்மை பெற்றவர்கள் கிளர்ச்சி செய்ததில் வியப்பொன்றுமில்லை. ஆனால், நிதியமைச்சர் இவ்வெதிர்ப்புக்களுக்காக அஞ்சி விட்டுக் கொடுக்கவில்லை. திட்டமிட்டபடி 1972ம் ஆண்டு மே தினத்தன்று இலங்கை வரலாற்றிலேயே முதற்தடவையாக கள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ் மாவட்டத்தில் இயங்கத் தொடங்கின. இப்பரிசோதனை வெற்றியீட்டினால் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் கள் உற்பத்தித் துறையில் இக் கூட்டுறவு முறை புகுத்தப்படுமென நிதியமைச்சர் அப்பொழுது அறிவித்தார்.

யாழ் மாவட்டத்திலே இச் சங்கங்கள் இயங்கத் தொடங்கி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதினால் இவற்றின் இயக்கத்தினைச் சற்று கூர்ந்து நோக்குவது பயனுள்ளது.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியாளருக்கு நன்மையளித்து வருகின்றனவா? புள்ளிவிபரங்களின் துணை கொண்டு இதனை நோக்குவோம். யாழ் மாவட்டத்திலே 19 சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில், உறுப்பினர்களாகச் சேர்ந்திருப்பவர்களின் தொகை 9263 ஆக இருந்த போதிலும், சீவல் தொழிலில் உண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் தொகை 5197, ஒரு சீவல் தொழிலாளி சராசரி மாதம் ரூ. 300 க்கு மேலாக உழைக்கக் கூடியதாக இருக்கின்

றது. மாதாந்தம் ரூபா 1000க்கு அதிகமாக 50 சீவல் தொழிலாளிகளுக்குமேல் உழைக்கின்றனர். யாழ் நகரிலுள்ள ஒரு சீவல் தொழிலாளி ரூ 1490 மாதாந்தம் உழைக்கின்றான். இதுவே மிகக் கூடுதலான வருமானம்.

இப்புள்ளி விபரங்களை நோக்குமிடத்து சங்கங்களின் குறிக்கோள்களில் ஒன்றாகிய உறுப்பினரின் பொருளாதார நலனை விருத்தி செய்தல் என்பது நிறைவேற்றப்பட்டு வருகின்றது என்று துணிந்து கூறலாம்.

மரவரிமுறை நடைமுறையிலிருந்த காலத்திலே அரசாங்கத்திற்கு ஆண்டு தோறும் 7 இலட்சம் ரூபாய் வருமானமாகக் கிடைத்தது; ஆனால் இச்சங்கங்கள் நிறுவப்பட்டு இயங்கி வரும் 18 மாத காலத்திலே அரசாங்கத்திற்கு . 6 630,000/- வருமானமாகக் கிடைத்துள்ளதென்றால் சில கொட்டில் முதலாளிகளும், சில அரசாங்க உத்தியோகத்தர்களும் முன்பு சீவல் தொழிலாளர்களை எவ்வளவு சுரண்டி வாழ்ந்து அனுபவித்தார்கள் என்பது சொல்லாமலே விளங்கும். இப்புள்ளி விபரங்களின் பின்னணியில் நோக்கும் போது கள்ளுச்சங்கங்கள் நிறுவப்படும் போது முதலாளிகளும், வேறு சிலரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஏன் ஈடுபட்டனர் என்பதை அதிகம் விளக்க வேண்டியதில்லை.

கூட்டுறவு முறை கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் உற்பத்தி [illegible] அரசாங்கத் திற்கு [illegible] இத்தத

ழிலில் ஈடுபட்டுள்ள சமுதாயத்தைச் சேர்ந்த அறுநூற்றுக்கு மேற்பட்ட படித்த வாலிபர்களுக்கும் நன்மை ஏற்பட்டுள்ளது. இச்சங்கங்களிலே அவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டு பல்வேறு பதவிகள் வகித்து வருகின்றனர். இவர்களுக்கு ஒரு மாதத்திற்கு சம்பளமாக வழங்கப்படும் மொத்தத் தொகை 1 லட்சம் ரூபாவிற்கு மேற்பட்டது.

இச்சங்கங்கள் பொருளாதார ரீதியாக வெற்றிகரமாக இயங்குகின்றன என்பதற்கு புள்ளி விபரங்கள் சான்று. மொத்த இலாபமாக இச்சங்கங்கள் ஒரு மாதத்திற்கு 5 இலட்சம் ரூபா ஈட்டுகின்றன. சுத்த இலாபம் ஒன்றரை இலட்சமாகும்.

மேலே தரப்பட்டுள்ள புள்ளி விபரங்கள் திருப்தியளிக்கின்ற போதிலும் சங்கங்களிடையே குறைபாடுகள் நிலவவில்லை என எவரும் கூறமுடியாது. இவற்றினைக் களைந்தெறிவதற்கு நெறியாளர்களும், உறுப்பினர்களும், பணியாளர்களும் ஒத்துழைத்தல் வேண்டும். இத்துடன் உறுப்பினர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் கூடுதலான நன்மைகளும், வசதிகளும் செய்து கொடுக்கப்படல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக கள் விற்பனையில் மட்டும் தங்கியிராது கருப்பட்டி உற்பத்தி, 'ஜீஸ்ற்', வினாகிரி உற்பத்தி, சாராய உற்பத்தி தெங்கு, பனம்பொருள் உற்பத்தி போன்ற தொழில்களிலும் சங்கங்கள் ஈடுபட்டால்தான் அவை நாட்டிற்கும், சமூகத்திற்கும் நன்மை செய்ய முடியும்.

# பங்கீட்டுத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறது

பரந்தன் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் பிரிவிலே பங்கீட்டுத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டுள்ளது. வாடிக்கையாளரிடமிருந்து மிக அரிதாகவே முறைப்பாடுகள் பெறப்பட்டிருக்கின்றன என பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V. S. இராமநாதன் 31-7-74 வரையிலான அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றார். இதிலிருந்து இங்கு பணியாற்றும் பணியாளர்களின் நேர்மையும், உணர்ச்சியும் நன்கு புலப்படும் என மேலும் அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது: இப்பிரிவிலேயுள்ள ப. நோ. கூ. சங்கங்களும் தமது உறுப்பினர்களுக்கு ரூபா 33 886,23/61 பெறுமதியான உரத்தையும் விவசாய இரசாயனப் பொருள்களையும் வழங்கியுள்ளன. மேலும், உறுப்பினர்களுக்கு விதை நெல்லைக் கடனாக வழங்கியுள்ளன. விவசாய இரசாயன பொருள்களுடன் ப. நோ. கூ. சங்கங்கள் எரிபொருள்களையும், இரும்புச்சாமான்களையும், சிமெந்தையும் விற்பனை செய்து வருகின்றன.

பரந்தன் பிரிவிலே இரண்டு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1973/74ல் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 12,796 இறாத்தல் கடலட்டையை ஏற்றுமதி செய்தது. பீக்கைத் தவிர இதன் பெறுமதி ரூ. 10[illegible],2[illegible]6,30 பீக்லியின் பெறுமதி ரூ. 68,905/03. இச்சங்கத்திடம் 8059 இறாத்தல் கடலட்டை கையிருப்பில் இருக்கின்றது. இது விரைவில் ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றது. இச்சங்கம் மீன்பிடி உபகரணங்களை விற்பனை செய்வதற்கான முகவர் உரிமையைப் பெற்றிருக்கின்றது. எட்டு இயந்திரப் படகுகளை இது சொந்தமாக வைத்திருக்

கின்றது. மேலும் 5 இயந்திரப்படகுகள் கட்டப்பட்டு வருகின்றன. பச்சிலைப் பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இப்பொழுதுதான் இயங்கத் தொடங்கியிருக்கின்றது. சிறுேர் திட்டத்திற்கு இச் சங்கம் 312,098 இருத்தல் இருலை விற்பனை செய்திருக்கின்றது.

விஸ்வமடுவிலும், திருவையாற்றிலும் இரண்டு படித்த வாலிபர் குடியேற்றத் திட்டங்கள் இயங்கி வருகின்றன. இக்குடியேற்றத் திட்டங்களில் உள்ள வாலிபர்கள் மிளகாய்ப் பயிர்ச் செய்கை மூலம் ஏறக்குறைய 15 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் சம்பாதித்த போதிலும் அவர்கள் சங்கத்திடமிருந்து எடுத்த கடன்களைத் திருப்பிக் கொடுக்கத் தயங்குகின்றார்கள் என்று உதவி ஆக்க ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். சங்கத்திற்கு மிளகாயை ஒப்படைத்தால் கடன் படிவம் கழிக்கப்படும் என அஞ்சி அவர்கள் குறைந்த விலையில் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு விற்கின்றார்கள். இவ்வாலிபர்கள் கூப்பன் சாமான்கள் வாங்குவதற்கு மாத்திரம்தான் சங்கத்தோடு தொடர்பு கொள்கின்றனர்.

இப்பிரிவில் மாவட்ட அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் 6 விவசாயத் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டு வருகின்றன.

3 கைத்தொழில் திட்டங்கள் செயற்பட்டு வருகின்றன.

கிராமப்புற மட்டத்தில் பல உரக்களஞ்சியங்கள் இக்கால எல்லையில் நிறுவப்பட்டுள்ளன. 54 நெற்களஞ்சியங்கள் கட்டப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்த ஆணைக் குழுவினுல் தர்மக்கேணி தோட்டத்தில் சுவீகரிக்கப்பட்ட காணியில் 25 இளைஞர் குடியேற்றப்பட்டு அவர்களுக்கென ஒரு கூட்டுறவுச் சங்கமும் பதியப்பட்டுள்ளது.

பரந்தன் பிரிவிலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| ப. நோ. கூ. சங்கங்களின் தொகை | 6 |
| கிளைகளின் தொகை | 72 |

| | | |
|---|---|---|
| விற்பனை நிலையங்கள் | | 91 |
| உறுப்பினர் தொகை | | 21,687 |
| பங்கு முதல் | | ரூ. 1,140,649 |
| கூப்பன் தொகை | | 71,801 |
| **பயிர்ச்செய்கைக்குட்பட்ட காணி :** | | |
| நெல் | ஏக்கர் | 52,721 |
| மிளகாய் | ,, | 1095 |
| வேறு பயிர்கள் | ,, | 251 |

இச் சங்கங்களின் நுகர்ச்சி, விவசாய விற்பனைச் சுழற்சி வருமாறு: ரூ. 16,199,389/26; ரூ. 7,875,775/71. ஒரு சங்கத்தைத் தவிர ஏனைய சங்கங்கள் இலாபத்தில் இயங்கின. 73/74 ல் ஐந்து சங்கங்கள் ரூ. 546,255/50 ஐ சுத்த இலாபமாகப் பெற்றன. 73/74 ல் நெல், மிளகாய் கடனுக முறையே ரூ. 3,760,342/31, 252,318/23 வழங்கப்பட்டன.

கிராமிய வங்கிகளில் உறுப்பினரும், உறுப்பினர் அல்லாதோரும் ரூ. 7,768,790/96 ஐ சேமித்துள்ளனர். இக்கிராமிய வங்கிகளில் ரூ. 828,096/- பெறுமதியான நகைகள் அடைவு பிடிக்கப் பட்டிருக்கின்றன.

73/74 போகத்தில் 301,363 புசல் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

---

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய நிதிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 21-9-74 ஞாயிற்றுக்கிழமை காலை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகர் திரு. க. சந்திரசேகரம் பேசுகையில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இச்சங்கம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பாராட்டினார்.

திரு. சு. சிவசுப்பிரமணியம் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# மரவரி நீக்கப்பட்டதால் அரசாங்கத்திற்கு இலாபம்

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக யாழ் மாவட்டத்தில் நடைமுறையிலிருந்து வந்த மரவரி முறை நீக்கப்பட்டு 197[illegible]ம் ஆண்டு தொழிலாளர் தினமாகிய மேதினத்தில் முதலாளிகளின் பலத்த எதிர்ப்பின் மத்தியில் கூட்டுறவுக் கள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் இலங்கையின் வரலாற்றிலே முதன் முறையாக நிறுவப்பட்டன. இன்று யாழ் மாவட்டத்தில் 19 கூட்டுறவுக் கள் விற்பனைச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. இவற்றில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளவர்களின் தொகை 9266 ஆக இருந்த போதிலும் சீவலில் ஈடுபட்டவர்களின் தொகை 5197.

சராசரி 10,800 பனை மரங்களும், 28,000 தென்னை மரங்களும் சீவப்பட்டு வருகின்றன. 1-1-74 தொடக்கம் 30-6-74 வரை 771,700 கலன் தென்னங்கள்ளும் 803,781 கலன் பனங்கள்ளும் இச் சங்கங்களால் கொள்வனவு செய்யப்பட்டது. இக்கால எல்லையில் 754,235 கலன் தென்னங்கள்ளும் 673,035 கலன் பனங்கள்ளும் விற்பனை செய்யப்பட்டன: சங்கங்கள் நடாத்தும் 244 தவறணைகள் மூலமே இவ்விற்பனை நடைபெற்றது.

ஒருமாதத்திற்கு மொத்த விற்பனை ரூ. 2,035,000. ஒரு சீவல் தொழிலாளி சராசரி மாதம் ரூ. 300க்கு மேலாக உழைக்கக் கூடியதாக இருக்கின்றது. 50 சீவல்காரருக்கு மேல் மாதாந்தம் ரூ. 1000 க்கு அதிகமாக உழைக்கின்றனர். யாழ் நகரிலுள்ள ஒரு சீவல் தொழிலாளி மாதாந்தம் ரூ. 1490 உழைக்கின்றார். இதுவே மிக்க கூடுதலான வருமானம்.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சமுதாயத்தைச் சேர்ந்த 600 க்கு . மேற்

பட்ட படித்த வாலிபர்கள் இச்சங்கங்களிலே வேலைக் கமர்த்தப்பட்டு பல்வேறு பதவிகளை வகிக்கின்றனர். இவர்களுக்குச் சம்பளமாக ஒரு மாதத்திற்கு வழங்கப் படும் மொத்தத் தொகை ஓர் இலட்சத்திற்கு மேற் பட்டது.

மொத்த இலாபமாக இச்சங்கங்கள் ஒரு மாதத் திற்கு 5 இலட்சம் ரூபாய் ஈட்டுகின்றன. சுத்த இலா பம் ஒன்றரை இலட்சமா கும்.

மரவரி முறை நடை முறையில் இருந்த காலத் திலே அரசாங்கத்திற்கு ஆண்டு தோறும் 7 இலட் சம் ரூபாய் வருமானமாகக் கிடைத்தது. ஆனால், இச் சங்கங்கள் நிறுவப்பட்டு இயங்கத் தொடங்கிய 28 மாதகாலத்தில் அரசாங்கத் திற்கு ரூபாய் 6,630,000 வருமானமாகக் கிடைத் துள்ளது.

இவ்வாண்டிலே 3 சங் கங்கள் சிறு அளவில் பனங் கட்டி உற்பத்தியை மேற் கொண்டுள்ளன. அடுத்த ஆண்டு 27 கருப்பட்டி உற் பத்தி நிலையங்களை நிறுவு வதற்கு உத்தேசம். இப் பொழுது சங்கானை ப. நோ. கூ. சங்கம் மாவட்ட அபிவிருத்திச் சபை திட்டத் தின் கீழ் பனங்கள்ளை போத்தல்களில் அடைத்து விற்கும் தொழிலை நடாத்தி வருகின்றது. அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தா பனம் வடிகலன்களை உற் பத்தி செய்து முடிந்ததும் ஒரே நேரத்தில் 200 கலன் கள்ளை வடிக்கத்தகக சிறு வடிசாலை நிலையங்களை அமைப்பதற்கும் உத்தே சிக்கப்பட்டுள்ளது.

---

## சேவை

தமது சொந்த அலுவல்களில் மட்டும் கண்ணுங்கருத் துமாக இருந்தால் போதும், கௌரவத்திற்காக மேற் கொள்ளும் பொதுப்பணியை விருப்பம் போல் எவ்வாறு வேண்டுமானாலும் செய்யலாம் என்று கருதுபவரை சேவையின் அடிப்படை இலட்சியத்தை அறியாதவராகத் தான் கருதவேண்டும்.

— மகாத்மா காந்தி

# பீக்ஸ் சேமிப்புத் திட்டத்தில் தொழிலாளர் நம்பிக்கை இழந்ததேன்?

S. ஸ்ரனிஸ்லாஸ்

பீக்ஸ் சேமிப்புத் திட்டம் பல நல்ல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பது முன்னர் எடுத்துக் காட்டப்பட்டது. பீக்ஸ் சேமிப்புப் படிப்படியாகக் கடலட்டைத் தொழில் அபிவிருத்திக்கு அடிகோலியதென்பதும் எடுத்துக் காட்டப்பட்டது. கடலட்டை உத்பத்தி பெருகியதற்கும், புதிய தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபடுவதற்கும் பீக்ஸ் சேமிப்பே காரணமென்றுகூடக் கூறலாம். இருப்பினும் கடலட்டைத் தொழிலாளர் பீக்ஸ் சேமிப்பில் உள்ள பணத்தைத் முற்றாக எடுக்கவேண்டுமென்று, சில காலத்தின்பின் எண்ணத் தொடங்கினார்கள். இவ்வாறு பீக்ஸ் சேமிப்புத் திட்டத்தில் நம்பிக்கை இழந்தவர்களாக அவர்கள் காணப்பட்டார்கள். தமது சேமிப்புக் கணக்கிலுள்ள பணத்தில் பெருந் தொகையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் ஆசைப்பட்டார்கள். இத்திருப்பத்துக்குக் காரணங்கள் எவையாயிருக்கலாம் என்பதைச் சுருக்கமாக ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

1968-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தின் கீழ் பணத்தை மீளப்பெறுவதற்குக் கடற்றொழில் அதிபரினதும், கூட்டுறவு உதவி ஆணையாளரினதும் அனுமதியைப் பெறவேண்டியிருந்தது. இவ்வனுமதியைப் பெறுவதில் ஏற்பட்ட காலதாமதமே இத் திட்டத்தைத் தொழிலாளர் விரும்பாமைக்குரிய முதற்காரணமெனலாம். விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுப் பல வாரங்களாக அனுமதி கிடைக்காது தொழிலாளர்கள் கஷ்டப்பட்டதுண்டு.

அனுமதி பெறுவதற்குக் கொழும்புகூடச் சென்று பலநாட்கள் தங்கிவந்தவர்களும் உளர். இதனால் எங்கள் பணம் இருந்தும் தக்க தருணத்தில் எமக்குக் கிடைக்கவில்லையே என்று பலர் மனச்சோர்வு அடைந்தார்கள். இதன் பிரதிபலிப்பாக யாழ் கடற்றொழில் பணிப்பகமே இவ்வனுமதியைக் கொடுத்தாலென்ன எனவும் கடற்றொழில் அதிபரைப் பலதடவை கேட்டிருந்தார்கள். இவ்வாறு தொழிலாளர் தொழிலுக்குத் தேவைப்பட்டு கேட்கும்பொழுது உடன் பணம் பெறமுடியாமல் காலந்தாழ்த்தியமையாலேயே தொழிலாளர் இச்சேமிப்புத் திட்டத்தில் நம்பிக்கை இழந்திருக்கவேண்டும்.

இரண்டாவதாகத் தொழிலுக்கென்று பணத்தைப் பெறும்போது அப்பணம் முழுதும் அடுத்து வரும் ஏற்றுமதியில் கழித்துக் கட்டவேண்டுமென்பதே நிபந்தனையாக இருந்தது. இந் நிபந்தனை நல்நோக்கத்துடன்தான் ஆக்கப்பட்டதென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். எனினும், பல ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களினால் அவனது தொழில் பாதிக்கப்பட்டிருக்கலாம். இதனால் அவன் மீளச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தமுடியாது இருந்திருப்பான். இந்நிலையிலும் அவன் கடன்பட்டோ நகை அடைவு வைத்தோ அவன் எடுத்ததொகையைத் திருப்பிக் கட்டவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டான். அவன் தொழிலுக்கென எடுத்த தொகையை மீளக் கட்ட முடியாமைக்கு ஏதாவது பொருத்தமான காரணமுண்டாயின் அதை ஆராய்ந்து விதி விலக்கு அளிக்க நடைமுறைப்படுத்தியவர்கள் முன்வரத் தயங்கினார்கள். இதனால் தொழிலாளி மனந்தளர்ந்தான். தான் பிரயாசப்பட்டுத் தேடிய பணத்தைத் தனது தொழிலில் முதலீடு செய்தும், துரதிஸ்டவசமாக ஏற்பட்ட உற்பத்திக் குறைவினால் தான் பாதிக்கப்படுவது அவனுக்கு வேதனையைக் கொடுத்தது. இவ்வாறு உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்து ஆறுதல் அளிக்காது எடுத்த பணத்தைத் திருப்பிக் கட்ட வேண்டுமெனத் தொழிலாளி நிர்ப்பந்திக்கப்பட்டமை இரண்டாவது காரணமாகும்.

கடற்றொழில் அபிவிருத்திக்கென வள்ளங்கள், வலைகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் இச்சேமிப்பிலிருந்து வாங்கலாமென இடமளிக்கப்பட்டிருந்த போதிலும், அது நடைமுறைபபடுத்தப்படவில்லை. அவ்வசதி பெயரளவில் இருந்ததேயன்றி செயலாக மாறவில்லை. இத்திட்டத்தைச் செயற்படுத்தப் பொறுப்பாக இருந்தவர்கள் இதைக் கைநழுவவிட்டுவிட்டார்கள். சுற்றறிக்கையில் தெளிவாக இது சுட்டிக்காட்டப்பட்டிருந்தும், இதை நடைமுறைப்படுத்தாமை ஆச்சரியத்துக் குரியதாகும். தொழிலாளி இதனால் நம்பிக்கை இழந்தான். இவ்வசதிகள் வீண்பேச்சென நம்பினான். ஒருசில அங்கத்தவர்களுக்காவது இவ்வசதியைச் செய்து கொடுத்திருந்தால் இத்திட்டம் இன்று உள்ளநிலையை அடைந்திராதென்பது எனது உறுதியான நம்பிக்கையாகும். இவ்வசதிகள் இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டிருந்தால், பிக்ஸ் சேமிப்பானது கடலட்டைத் தொழில் அபிவிருத்தியோடு மட்டும் நின்றுவிடாது கடல் தொழில் அபிவிருத்திக்கும் வழிவகுத்திருக்குமென்பதில் என்னளவும் ஐயமில்லை. எவ்வளவு தொகையையும் சேமிப்பில் வைத்திருக்கத் தொழிலாளி விரும்பியிருப்பான். சேமிப்புப் பணத்தை முற்றாக எடுக்கவேண்டுமென்ற பிரச்சினையே தோன்றியிருக்காது எனலாம். இத்திட்டம் சீரழிந்து இன்றைய நிலையை அடைந்தமைக்கு, செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றவர்களின் கவனக்குறைவும், சிரத்தையின்மையும், அலட்சியமும் காரணமாயிருந்திருக்கலாமென்றுகூட நம்ப இடமுண்டு.

இதுமட்டுமல்ல, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியவர்கள் வேறுமொரு பிரதான நோக்கத்தை அலட்சியம் செய்துவிட்டார்கள். விவாகமாகும் வேளைகளில், நோய்வாய்ப்படும் போது. கோவில் திருவிழாக்காலங்கள், நிலம் வாங்குதல், வீடு கட்டுதல், இவையெல்லாவற்றிற்கும் பணம் வழங்க இச்சேமிப்புத் திட்டம் வழிவகுத்துள்ளதென்பதை செயற்படுத்துவோர் முற்றாக மறந்துவிட்டார்கள். மறந்தாலாவது மன்னிக்கலாம். ஆனால், இத் தேவைகளுக்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களையே அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. ஏனெனில் இவ்வித

உதவிசளுக்கு பண உதவி வழங்கும் நடைமுறை விதிகளை எவரும் ஆக்கிக் கொள்ள முயற்சிக்கவில்லை. அதனால் இவ்வசதி இத்திட்டத்தின் கீழ் அளிக்கபபடவில்லை.

இந்நிலைக்குத் தொழிலாளியும் காரணம் என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். மேற்கூறிய பிரத்தியேக தேவைகளுக்குப் பணம் பெறும் வாய்ப்பை இத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அவர்கள் கேட்பதற்குப் பதிலாக, தங்கள் பணத்தை முழுதும் தாருங்கள் என்று கேட்கமுற்பட்டமையைப் புத்திசாலித்தனமான ஒரு செயலாக நாம் கொள்ள முடியாது. பொறுப்பாளிகள் யாராயிருப்பினும் இத்திட்டம் சீரழிந்து போனமை வருந்தத் தக்கதாகும்.

மேற் கூறியவை மட்டும் காரணங்களல்ல. பெரிய சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் விரிவாக்க திட்டத்தின் கீழ் அனேக சிறிய கட்டைட் தொழில் சங்கங்கள் இணைக்கப்பட்டுத் தாய்ச் சங்கங்களாக்கப்பட்டன. ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு, பூநகரி, மாந்தை, மன்னார் ஆதியன இத்தகைய தாய்ச்சங்கங்களாகும். இத்தகைய தாய்ச் சங்கங்களில் சில இச் சேமிப்புப் பணத்தை சேமிப்பாளர்களின் அனுமதியின்றி வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தத் தொடங்கினார்கள். இதனால் தங்கள் பணம் இவ்வாறு வேறு துறைகளில் செலவழிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் தொழிலாளர்களிடையே தோன்றியது. தங்கள் சேமிப்புக்கு எதுவித உத்தரவாதமும் இல்லையே யெனத் தொழிலாளி பயந்தான். இதனால் தன் சேமிப்பு முழுவதையும் திருப்பிப் பெறுவோமென வாதாடினான். சில சங்கங்கள் மிகவும் பொறுப்பற்ற முறையில் சேமிப்புக்கெனப் பிரத்தியேக வங்கிக் கணக்கில்லாமலே செயற்படத் தொடங்கின. இதனால் தொழிலாளர்கள் நம்பிக்கை இழந்தனர் எனலாம்.

வாழ்க்கைச் செலவு கூடியமையும் ஒரு காரணமெனலாம். இதனால் தொழிலாளிக்குக் குடும்பச் செலவுக்குக் கூடிய பணம் தேவைப்பட்டது. இதனால் அவன் எடுத்த தொகையை மீளச் செலுத்த முடியாது கஷ்டப்பட்டான். இதை ஆராய்ந்து சேமிப்பு வீதத்

தைச் சற்றுக் குறைத்திருந்தால் தொழிலாளி திருப்திப்படுவதுடன், அவன் சேமிப்பைத் தொடர்ந்து செய்யச் சம்மதப்பட்டிருப்பான். இது செய்யத் தவறியமையால் அவன் முழுப்பணத்தையும் பெற வேண்டுமென்று முனைந்து நின்றமையில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கடைசியாக வேறொரு காரணமும் இருந்திருக்கலாம். சங்கங்களில் உள்ள சிலர் வேறு அங்கத்தவர்களின் பெயரில் தங்கள் அட்டைகளை அனுப்பிவந்தார்கள். இதனால் அவர்களது பிக்ஸ் சேமிப்பு வேறு அங்கத்தவர்கள் பெயர்களிலேயே புத்தகங்களில் காட்டப்பட்டுவந்தது. இதனால் இவ்வித அங்கத்தவர்களிடையே மனக்கசப்பு ஏற்படுமாயின் தங்கள் பணத்தை எடுப்பது கஷ்டமெனவும் சிலர் எண்ணினார்கள். எனவே தங்கள் பணத்தை எவ்வளவு விரைவில் பெற முடியுமோ அவ்வளவு விரைவில் பெற முனைந்தார்கள்; வெற்றியும் கண்டார்கள்.

இவ்வித காரணங்களால் அரிய பல இலட்சியங்களுடன் உருவாக்கப்பட்ட பிக்ஸ் சேமிப்புத்திட்டத்தில் அங்கத்தவர்கள் நம்பிக்கை இழந்தனர். இதனால் தமது சேமிப்பைத் திருப்பித்தர வேண்டுமென வாதாடினர். சற்றில் ரூபா 5000க்கு மேற்பட்ட தொகையை அவர்கள் முற்றாகப் பெறும் வாய்ப்பைப் பெற்றார்கள். ரூபா 50,000 ஆக வளர்ந்து வந்து கொண்டிருந்த சேமிப்புத் திட்டம் ரூபா 5,000 வரை மட்டம் தட்டப்பட்டமை வருந்தத்தக்கதாகும். இத்திட்டத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்ய முயற்சிப்பது அவசியம்.

❊ ❊ ❊

## சர்வதேச வல்லுநர் குழு

வவுனிக்குளத்திலுள்ள நீர்ப்பாய்ச்சல் குடியேற்றத் திட்டத்தினை நவீனப்படுத்தி முன்னேற்றும் பொருட்டு அண்மையில் சர்வதேச வல்லுநர் குழு ஒன்று அப்பகுதிக்கு விஜயம் செய்து பார்வையிட்டது.

(முற்றொடர்)

# ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை

## நிருவாக அறிக்கை 17-3-1973 — 25-5-1974

(4) இலங்கை புகையிலைக் கூட்டுத்தாபனத்தினால் கொடுக்கப்படும் கழிவை அதிகரித்தல்.

(5) இலங்கை பிங்கான் கோப்பைக் கூட்டுத்தாபனத்தின் நிபந்தனை விற்பனையைத் தடை செய்தல்.

(6) விற்பனையின் பேரில் கூட்டுறவுச் சங்கங்களினால் ஒப்படைக்கப்படும் காசோலைகளை ஏற்கும்படி, இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தையும், சீமெந்துக் கூட்டுத்தாபனத்தையும் கேட்டல்.

(7) கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான இருப்புகளை காலதாமதமின்றி வழங்கும்படி அரசாங்கக் கூட்டுத்தாபனங்களைக் கேட்டல்.

இவ்விதமான கருத்தரங்குகளினால் கூட்டுறவுச் சங்கங்களின் பல பிரச்சினைகள் சுலபமாகத் தீர்க்கப்பட்டன. சீமெந்துக் கூட்டுத்தாபனமும், உப்புக் கூட்டுத்தாபனமும் கூட்டுறவுச் சங்கக் காசோலைகளை ஏற்க இணங்கியமைக்கு நாம் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கௌரவ கைத்தொழில் அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பல பிரச்சினைகளுக்குச் செவிமடுத்து, அவைகளைத் தீர்த்து வைப்பதற்கு உதவியமைக்கு நாம் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நெசவு நூல் விலையேற்றம் பற்றி நாம் இவ்வமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்ட வேண்டுகோள் வெகு விரைவில் பரிசீலனைக்கெடுக்கப்பட்டு விரைவான நிவாரணம் எமக்கு கிடைக்குமென திடமான நம்புகின்றோம்.

### மக்கள் வங்கியுடன் உள்ள தொடர்பு

பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில், ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை மக்கள் வங்கியுடன் நெருங்கிய

தொடர்பு கொண்டிருந்தது. இக்காலப்பிரிவில் நாம் மக்கள் வங்கியுடன் இரண்டு கலந்துரையாடல்களை நடத்தியதன் மூலம், கூட்டுறவுச் சங்கங்களினால் எதிர் நோக்கப்பட்ட பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடியவர்களாகவிருந்தோம்.

(1) பங்கீட்டுப் புத்தக அடிப்படையில் கொடுக்கப்பட்டுவந்த கடன் ரூபா 5/- இருந்து ரூபா 8/- ஆக உயர்த்தப்பட்டது.

(2) மேற்கூறப்பட்ட தொகையில் 50% வங்கி அதிகப்பற்று முறையில் வழங்குவதற்கு நடபடிக்கை எடுக்கப்பட்டது. (ஆரம்பத்தில் இது 25% மாகவே கொடுக்கப்பட்டு வந்தது.)

(3) கூட்டுறவுச் சங்கங்கள், மட்பாண்டக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் பொருட்களை வாங்கி விற்பதற்கும், சிமெந்து, கட்டடப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கும் ஏற்ற முறையில் கூடிய கடன் பெறும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

(4) கிராமிய வங்கிகளுக்கு அளிக்கப்பட்ட கடன் வசதி அதிகரிக்கப்பட்டது.

(ஆ) கிராமிய வங்கி தனது சுத்த இலாபத்தில் ரூபா 150,000/- யை ஸ்ரீ லங்கா தேசியக் கூட்டுறவுச் சபையின் கல்வி அபிவிருத்தி முயற்சிகளுக்கு வழங்குவதற்கான விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. கௌரவ உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் அவர்கள் இது தொடர்பாக கௌரவ நிதி அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ளார். கூடிய விரைவில் கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் இதனை அங்கீகரிப்பார் என நாம் திடமாக நம்புகின்றோம். இது தொடர்பாக நாம் மக்கள் வங்கிக்கும், கௌரவ உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ நிதி அமைச்சர் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

(இ) கூட்டுறவு ஆக்க ஆணையாளருடனும், மக்கள் வங்கியுடனும் சம்பாஷணை நடத்தி, குலைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் வைத்திருந்த மக்கள் வங்கிப் பங்குகளை ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபைக்கு மாற்றுவதற்கான நடபடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் பயனாக 47 குலைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மக்கள் வங்கிப் பங்குகள் ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபைக்கு மாற்றப்பட்டன. இப்பங்குகளின் தொகை ரூபா 20,121-03 ஆகும். மேலும் 144 குலைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மக்கள் வங்கிப் பங்குகளை தேசியக் கூட்டுறவுச் சபைக்கு மாற்றப்பட வேண்டியுள்ளது. இச் சங்கங்களது மக்கள் வங்கிப் பங்குகளின் பெறுமதி ரூபா 45,089-03 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவைகளும் மாற்றப்படுமாயின், மக்கள் வங்கியில் எமது பங்குத் தொகையின் பெறுமதி ரூபா 100,000/- வாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஈ) முன்பிருந்து வந்த 24 மாவட்டக் கூட்டுறவுச் சமாசங்களும் ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையுடன் ஒன்றிணைக்கப்பட்டதுடன், மத்திய நிதிக் கட்டுப்பாட்டுத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. மாவட்டக் குழுக்களினால் பெறப்படும் பணங்களை வங்கியிலிடுவதற்கும், மாவட்ட ரீதியில் மக்கள் வங்கிக் கிளைகள் மூலம் காசோலைகளை மாற்றுவதற்கும், மக்கள் வங்கி எமக்களித்துள்ள சலுகைகளுக்கும் நாம் இச்சந்தர்ப்பத்தில் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

(உ) இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களுக்கும், மக்கள் வங்கிக்குமிடையே ஒரு முக்கிய பிரச்சினை கிளம்பியுள்ளது. மக்கள் வங்கிச் சட்டத்திற்குக் கொண்டு வரப்படவிருக்கும் மாற்றத்தினால், மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபைக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று பிரதிநிதிகளைத் தெரிவு செய்யுந்

உரிமையையும், மக்கள் வங்கிப் பங்குகளை கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கும் உரிமையையும் இழந்துவிடும். இது சம்பந்தமாக எமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் விண்ணப்பங்களை கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கும், கௌரவ உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளோம்.

ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையின் தலைவர் அவர்களின் முயற்சியினால் மக்கள் வங்கிப் பங்குதாரரின் பொதுக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கும் மாற்றங்கள், மக்கள் வங்கிச் சட்டத்தில் இடம் பெறலாகாது என்ற பிரேரணை நிறைவேற்றப்பட்டது. நாட்டிலிருக்கும் சகல கூட்டுறவாளர்களும், கௌரவ உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் அவர்களின் கவனம் இவ்விடயத்தில் செலுத்தப்பட்டு, எமது ஆவல் பூரணப்படுத்தப்படுமெனத் திடமாக நம்புகின்றனர்.

## 12. அமைக்கப்பட எண்ணியிருக்கும் கூட்டுறவுக் காப்புறுதிச் சங்கம்

கூட்டுறவுச் சங்கங்கள், காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் கொண்டுள்ள தொடர்புகளினால் பல பிரச்சினைகளுக்குள்ளாக்கப்படுகின்றன என்பதனை அவதானித்த கௌரவ உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் அவர்கள், ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையைக் கூட்டுறவுக் காப்புறுதிச் சங்கம் ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி பணித்துள்ளார். இதற்கமைவாக நாம், கூட்டுறவு ஆக்க ஆணையாளரின் உதவியுடன், இது தொடர்பாகத் தேவைப்படும் விபரங்களைத் திரட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். சர்வதேசக் கூட்டுறவு இணைப்பு இவ்விடயம் பற்றி நன்கு ஆராய்வ

(தொடர்ச்சி 30-ம் பக்கம்)

[முற்றொடர்]

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்

## தோற்றுவாயும் வளர்ச்சியும்

(G. குருகுலசூரியா யாத்த நூலைத் தழுவி எழுதப்பட்டது)

### மீன்பிடித் துறையில் கூட்டுறவுச் சங்கங்கள்

நீண்டகாலமாக மீன்பிடித்துறை பொருளாதார அமைப்பின் பின்தங்கிய பகுதியாக இருந்து வந்தது. 1973 ல் மத்திய மீன்பிடிச் சமாசம் (இது தன்விருப்பார்ந்த தனியார் நிறுவனம்) நிறுவப்பட்டதும் மீன்பிடித்துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என கிளர்ச்சி எழுந்தது. மீன்பிடித் தொழிலுக்குப் பொறுப்பாக இருந்த உள்ளூர் நிருவாக நிறைவேற்றுக் குழு நிலைமையை ஆராய்வதற்கு ஓர் உபகுழுவை நியமித்தது. இவ்வுபகுழுவில் பின்வருவோர் இடம் பெற்றனர்: திருவாளர்கள் சிறிபால சமரக்கொடி (தலைவர்) K. நடேஸ் ஐயர், A. R. A. ரசீக், A. அமிர்தலிங்கம் செயலாளர். இவ்வுபகுழுவின் அறிக்கையே (1941 ம் ஆண்டின் அமர்வு அறிக்கை 11) மீன்பிடித் துறை பற்றி புதிய உத்தியோகபூர்வமான சிந்தனைக்கு வித்திட்டது. இதுவே 1940 ல் மீன்பிடிச்சட்டம் இல. 24 நிறைவேறுவதற்கு வழிகோலியது. மீனவர்களுக்குக் கடன் வழங்குவதற்கும், அவர்களுக்கு சந்தைப்படுத்தல் ஒழுங்குகளைச் செய்து கொடுப்பதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட வேண்டுமென அது தகவுரை செய்தது. அப்பொழுது நிலவிய சூழ்நிலையில் படகுகளும், வலைகளும் முதலாளிகளின் சொத்துகளாய் இருந்தமையாலும் மீன்பிடித் தொழிலின் முகாமை அமைப்பினாலும் பெரும்பாலான உழைக்கும் மீனவரின் பலவீனத்தை இவ்வறிக்கை சுட்டிக்காட்டிறது. போர்க்காலத்திலே மீனவரிடையே கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதற்கு ஊக்கமளிக்கப்பட்

டது. இது உணவுற்பத்தி இயக்கத்தின் ஒரு பகுதியாகக் கணிக்கப்பட்டது. 1942 அளவில் ஒரு சங்கம் இயங்கியது. 1945ல் 30 சங்கங்கள் இயங்கிவந்தன. போர்க்காலச் சூழ்நிலையில் கடற்றொழில் ஆணையாளரே கடன் வசதிகளையும் வழங்கினர். பிடிபட்ட மீனையும் கொள்வனவு செய்தார். கடற்றொழில் ஆணையாளர் கண்டிப்பற்ற நிபந்தனைகளில் வழங்கி வந்த கடன்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மீனவர்கள் (பெரும்பாலும் படகு, வலை சொந்தக்காரர்கள்) குழுக்களாகச் சேர்ந்து தம்மைச் சங்கங்களாகப் பதிவு செய்து கொள்ள எத்தனித்தனர்.

போர் முடிந்த பின்பு அரசாங்கம் மீன் பிடித் தொழில்மீது தொடர்ந்தும் அக்கறை கொண்டிருந்தது. திருந்திய தொழில் நுட்ப முறைகளையும் மீன்பிடி உபகரணங்களையும் மூலதன இணைப்புக்களையும் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. வெளி நாட்டு (குறிப்பாக கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளின்) உதவியுடன் மீன் பிடித்திணைக்களம் இழுவலை மீன்பிடித்தல் உட்பட இப்பணிகளை நேரடியாக மேற்கொண்டது. மீன்பிடித் தொழிலில் பொருளாதார ரீதியாக ஒப்பேறக் கூடிய பொதுத்துறையை உருவாக்கும் பொருட்டு தேசிய மீன்பிடித் தொழில் கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென 1952 லேயே அமைச்சரவை சிபாரிசு செய்தது. 1964 ல் இது நனவாகிற்று. எனினும், வள்ளங்களுக்கும், தெப்பங்களுக்கும் பதிலாக இயந்திரப் படகுகள் பாவனைக்கு வந்தமையும் 1955ம் ஆண்டளவிலிருந்து (அக்கால கட்டத்தில் கொழும்பிலுள்ள முகத்துவாரத்தில் மீன்பிடித் துறைமுகமும் குளிர்சாதனங்களைக் கொண்ட நிலையமும் கட்டப்பட்டு வந்தன) நைலோன் வலையும் பாவனைக்கு வந்தமையும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். 1950 ம் ஆண்டிலே மொத்தமாக முப்பத்தொன்றாயிரம் தொன் மீன் பிடிபட்டதாகக் கணிக்கப்பட்டது. இத் தொகை 1963ல் 90,000 தொன்னாக உயர்ந்தது. 1949-50 ல் கூட்டுறவுக் கடற்றொழிலாளர் சங்கங்களின் மொத்த விற்பனை ரூ. 923,363. எனினும்

சங்கங்களிடையே சம பலம் இன்மையால் இத்தொகையில் தூவ கூட்டுறவு மீன் விற்பனைச் சங்கம் மட்டும் ரூபா 656,915/- விற்கு விற்பனையை நடாத்தியிருந்தது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை மாற்றியமைப்பதற்கும், கடற்றொழிலாளருக்கு நவீன உபகரணங்களையும், தொழில் முறைகளையும் பரிச்சயப்படுத்துவதற்கும் கூட்டுறவுத் திணைக்களத்திற்கும் மீன்பிடித்தொழில் திணைக்களத்திற்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பின் அவசியத்தினை கூட்டுறவு பதிவு காரியஸ்தர் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்தார். கூட்டுறவுத் தத்துவம், நடைமுறை ஆகியவை பற்றி உறுப்பினர்களுக்குப் போதிய கல்வி புகட்டாது சங்கங்களைப் பதிவு செய்து வந்தமையினால் 1950 ல் பதிவு காரியஸ்தர் பின்வருமாறு கூறினார்: "அநேகமான சங்கங்கள் கூட்டுறவுத் தன்மை வாய்ந்தவையுமல்ல. அவை உண்மையான மீன்பிடித் தொழிலாளருடையவையுமல்ல, உண்மையான கூட்டுறவுச் சங்கங்களுமல்ல"

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் குறித்து விசேட கடமைகளை மேற்கொள்ளும் பொருட்டு அவ்வாண்டிலே திரு. T. D L. பீரிஸ் உதவிப் பதிவு காரியஸ்தராக நியமிக்கப்பட்டார். திணைக்களங்களுக்கிடையே ஒத்துழைப்பு உருவாகியது. கடன் வழங்குவதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. கடற்றொழிலாளர் கூட்டுறவுக் கடன் விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு கடற்றொழில் சங்கங்கள் ஆகிய இரண்டுவகைச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இரண்டாவது வகைச் சங்கத்தில் மீன்பிடி உபகரணங்கள் கூட்டுச் சொத்தாக இருந்தன. அத்துடன் பிடிபட்ட மீனும் சங்கத்தின் சொத்தாகக் கருதப்பட்டது. சங்கங்கள் மாற்றியமைக்கப்பட்டதின் விளைவாக 1950 செப்டெம்பர் இறுதியில் சங்கங்களின் தொகை 33 ஆகக் குறைந்துவிட்டது.

1952 ல் இலங்கை கூட்டுறவு மீன் விற்பனைச் சமாசம் உருவாக்கப்பட்டமை பெரும் முன்னேற்றம் என்லாம். இதன் மூலம் கடற்றொழிலாளர் சங்கங்கள் தமது கூட்டுக்கருத்துக்

களை வெளிப்படுத்துவதற்கும் கூட்டாகச் சந்தைப்படுத்துவதற்கும் இந்நிறுவனம் உதவுவதோடு தொழில் நடாத்துவதற்கு வேண்டிய வசதிகளையும் அது செய்து கொடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. T D L. பீரிஸ், திரு. T. வின்சன்ற் பெர்ணண்டோ (தலைவர், தூவ கூட்டுறவு மீன் விற்பனைச் சங்கம்) கலாநிதி C. C. ஜோன் (அரசாங்க மீன்பிடித் தொழில் ஆலோசகர்) ஆகியோர் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் விளைவாகவே இச்சமாசம் பெப்ரவரி 1952 ல் பதிவு செய்யப்பட்டது. முதலாவது தலைவராக T. D. L. பீரிசும், உபதலைவராக திரு. வின்சன்ற் பெர்ணண்டோவும் தெரிவு செய்யப்பட்டனர். முதலாவது நெறியாளர் குழு உறுப்பினர்கள் வருமாறு: (தெரிவு செய்யப்பட்ட நெறியாளர்) திருவாளர்கள் P. M. ஜோன், (குருநகர் கரைவலை கூட்டுறவு மீன் பிடிச்சங்கம்) B. L. ஜெரமானு பர்ணாந்து (தலாவிலமாறவில மொட்டுவெல, கூட்டுறவு மீன் பிடிச்சங்கம்) I. வின்சன்ற் பர்ணாந்து (தூவ கூட்டுறவு மீன் விற்பனைச் சங்கம்) K. A. சிறிசேன (தங்காலை கூட்டுறவுக் கடற்றொழிலாளர் கடன் விற்பனைச் சங்கம்) S. S. கலபதி (திருகோணமலை வடக்கு கூட்டுறவு கடற்றொழிலாளர் கடன் விற்பனைச் சங்கம்) நியமிக்கப்பட்ட நெறியாளர்: மேஜர் L. V. குணரத்ன, கலாநிதி C. C. ஜோன். M L. D குணசேகரா, T. D. L பீரிஸ்.

44 ஆரம்ப கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சமாசத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்தன. 1952 ல் ஒக்டோபர் இறுதியில் கொழும்பு மாநகர சபைச் சந்தையில் மீனைச் சில்லறையாக விற்கும் உரிமையையும் அதுவரை காலமும் மீன்பிடித் திணைக்களத்தினால் பயன் படுத்தப்பட்டு வந்த குளிர்சாதன நிலையத்தின் பாவனையையும் சமாசம் பெற்றது. அப்பொழுது தான் சமாசம் முழு மூச்சாக இயங்கத் தொடங்கியதெனலாம். ஜனவரி 31 1953 உடன் முடிவுற்ற மூன்று மாத கால எல்லையில் ரூ 473,629 பெறுமதியான 491,453 இறாத்தல் மீனை சமாசம் கையாண்டது. (வளரும்)

# கூட்டுறவுக் கைத்தொழில்கள்

K. G. பெரேரா

(பிரதி கூட்டுறவு ஆக்க ஆணையாளர்)

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்திற்கு ஏறக்குறைய 62 ஆண்டு வரலாறு உண்டு 1942 க்கு முற்பட்ட கால எல்லையில் கடனுதவு சேமிப்புச் சங்கங்களே பெரும்பாலும் உருவாக்கப்பட்டன. கிராமப்புற வாசிகளைக் கடன் பளுவின் கோரப்பிடியிலிருந்து விடுவித்து கிராமப்புற விவசாயிகளுக்குக் கடனுதவு திட்டத்தை வகுக்கும் பொருட்டே அவை அமைக்கப்பட்டன. கூட்டுறவுக் கடனுதவு சங்கத்தின் அமைப்பு எளிதானதாக இருந்ததோடு உறுப்பினர் தொகையும் குறுகியதாக இருந்தது. இரண்டாம் உலகப் போரின் விளைவாக புதிய துறைகளுக்கு முதன்மை வழங்கப்படத்தொடங்கியது. கூட்டுறவு பாவனையாளர் இயக்கம் பெருவளர்ச்சி கண்டது. அத்தியாவசிய உணவுப் பொருள் தட்டுப்பாட்டின் காரணமாக பொது மக்கள் யாவரையும் எட்டக்கூடிய ஆனால், அதேசமயம் அரசாங்கத்திற்கு அதனால் அதிக செலவு ஏற்படாத விநியோக அமைப்பை அக்காலக் குடியேற்ற அதிகாரிகள் உருவாக்க வேண்டியிருந்தது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஓரே நிறுவனம் கூட்டுறவுச் சங்கமே என முடிவு செய்யப்பட்டதும் இலங்கை தோறும் கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கங்கள் நிறுவப்பட்டன. பாவனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகள் கடனுதவு சங்கங்

களின் நிறுவன அமைப்பைத் தழுவியனவாக இருந்தன. இதனால், பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்களில் செம்மையான முகாமை நடைமுறைகளும், முகாமைத்துறைப் பணியாளர்களும் உருவாகவில்லை. பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வெறுமனே ஒரு விநியோக நிறுவனமாக இருந்ததே தவிர, பாவனையாளரைச் சார்ந்த அபிவிருத்திக் கொள்கைகளை அவை சுறுசுறுப்புடன் கடைப்பிடிக்கவில்லை.

நாடு விடுதலை பெற்றதும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் வழங்கபபடத் தொடங்கியது. இதனால் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் அதிமுக்கியத்துவம் பெற்றன. விவசாய உற்பத்திக்குக் கடன்களை வழங்குவது, வேளாண்மைக்கு வேண்டிய பல்வேறு இடுபொருள்களைத் தருவிப்பது, உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவது ஆகியவைகள் இச்சங்கங்களில் அடிப்படை நோக்கங்களாக இருந்தன.

இச்சங்கங்களின் செயற்பாட்டின் விளைவாக கிராமப்புற பொருளாதார அமைப்பிற்கு ஓரளவு புத்துயிரளிக்கப்பட்டபோதிலும், இத்திட்டத்தை முழுமொத்தமாக நோக்கும்போது அது வெற்றியீட்டவில்லை எனலாம். 1957ல் புதிய பரிசோதனையாக ப. நோ. கூ. சங்க அமைப்பு உருவாக்கப்பட்டது. தனிநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அதாவது, கூட்டுறவு பண்டசாலைச் சங்கங்களும், விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கங்களும் ப. நோ. கூ. சங்கங்களாக மாற்றப்பட்டன.

ப. நோ. கூ. சங்க மறுசீரமைப்பின் முதற் கூறு இப்பொழுது முடிவுற்றுவிட்டது. 5818 கூட்டுறவுச் சங்கங்களும், 124 ப. நோ. கூ. சங்க சமாசங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு 368 பெரிய ஆரம்ப ப. நோ. கூ. சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1970ம் ஆண்டிலே இயற்றப்பட்ட கூட்டுறவுச் சங்க விசேட ஏற்பாடு சட்ட இல 35ன்படி இது நடைபெற்றது. 1095 சங்கங்களின் பதிவுகள் அழிக்கப்பட்டன. ஏனைய சங்கங்கள் புதிய திட்டத்தின்படி ப. நோ கூ. சங்கக் கிளைகளாக மாறின.

அரசாங்கத்தின் 5 ஆண்டுத் திட்டம் கிராமப் புறத்

துறைக்குப் புத்துயிரளிக்கும் பொருட்டு விவசாயத்தைத் தழுவிய கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்யத் திட்டம் வகுத்துள்ளது. கிராமப்புறப் பொருளாதார அமைப்பிற்குப் புத்துயிரளிக்கும் முயற்சி பெருமளவில் பெரிய ஆரம்பப் ப. நோ. கூ. சங்கங்களிலேயே தங்கியிருக்கின்றது. கடந்த காலங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசிய நுகர்ச்சிப் பொருள்களை விநியோகிப்பதுடன் நின்று விட்டன. மறுசீரமைப்பிற்குப் பின் செயல் வேகமும், முனைப்பும் பெற்ற நிறுவனங்களாக அவை இயங்கவேண்டும். இப்பொழுது அவை அபிவிருத்தி நிறுவனங்களாகச் சேவையாற்ற வேண்டும். கிராமப்புறப் பொருளாதார அமைப்பைப் பல்வகைப்படுத்தி கிராமங்களிலே புதிய வளர்ச்சித்தளங்களை அவை உருவாக்க வேண்டும். விநியோகிக்கும் நிறுவனமாக மட்டுமல்ல, பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாகவும், கொள்வனவு நிறுவனமாகவும், விற்பனை நிறுவனமாகவும் அவை விளங்க வேண்டும். கிராமப்புற பொருளாதார அமைப்பின் உற்பத்தி வளத்தைப் பெருக்குவதென்றால் கைத்தொழில் முயற்சிகளுக்கான வசதிகளைச் செவ்வனே அமைத்து அவை தயாரிக்கும் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை உருவாக்குவது இன்றியமையாதது. இத்தகைய வசதிகளும், ஒழுங்குகளும் இல்லாதிருந்தமையே கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய முட்டுக்கட்டைகளில் ஒன்றாக இருந்தது. இதன் விளைவாக சிறு உற்பத்தியாளர் தரகர்களாலும், சிறு வியாபாரிகளாலும் சுரண்டப்பட்டனர்.

கூட்டுறவு இயக்கத்தின் மறுசீரமைப்புடன் சிறு கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கான நிறுவன அடித்தளம் அமைக்கப்பட்டு விட்டது. பொருளாதார ரீதியாக ஒப்பேறக்கூடிய நிறுவனமாக மாற்றி நாட்டின் பொருளாதாரத்திலே, குறிப்பாக கிராம அபிவிருத்தியில் முக்கிய பங்கினைச் செலுத்தும்பொருட்டு கூட்டுறவுச்சங்கங்கள் மறுசீரமைக்கப்பட்டன. நுகர்ச்சி, விவசாயம், கைத்தொழில், சந்தைப்படுத்துதல் ஆகிய துறைகளின் அபிவிருத்தியிலே பெரிய ஆரம்பப் ப. நோ. கூ. சங்கங்கள் நேர

டியாகப் பங்குபற்றும் என எதிர் பார்க்கப்படுகின்றது. சிறு பொறியியல் உற்பத்தி தொடக்கம் புடவை உற்பத்திவரையிலான கைத்தொழில்களில் இச்சங்கங்கள் ஈடுபடலாம்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளினுல் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் முயற்சிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களே ஏற்ற நிறுவன வடிவம் என கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது. இம்முயற்சிகளில் பல பெரிய ஆரம்ப ப. நோ. கூ. சங்கங்களினுல் அல்லது விசேட கூட்டுறவுச் சங்கங்களால் (இவற்றில் ப. நோ. கூ. சங்கங்கள் உறுப்பினர்களாகச் சேரலாம்.) மேற்கொள்ளப்படலாம். எனவே, புதிய கூட்டுறவு அமைப்பில் பெரிய ஆரம்ப ப. நோ. கூ. சங்கம் கிராமப்புற மட்டத்தில் பிரதான பொருளாதார அமைப்பாக விளங்குவதோடு அதன் தொழிற் பரப்பிலே தொடங்கப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு வேண்டிய முகாமைத்திறனையும், சமூக உடைமையாக்கப்பட்ட முதலையும் அளிக்க வல்லது. மாவட்ட அபிவிருத்தி சபைத் திட்டங்களில் இடம் பெறும் சிறுகைத்தொழில் கூட்டுறவு முயற்சிகளை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். ஆரம்ப சங்கம் தானே நேரடியாக நிருவகிக்கும் உற்பத்தி முயற்சி ஒருவகை. இதில் வேலை செய்யும் பணியாளர்களும், உற்பத்திப் பகுதியின் உறுப்பினர்களும் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கத்தின் நேரடிப் பணியாளர்களாக இருப்பர். சங்கமே முதலீடு செய்து இம்முயற்சியை நடாத்தும். இரண்டாவது வகையிலே சிறு கைத்தொழில் முயற்சிகள் விசேட கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களாக அமைக்கப்பட வேண்டும். இவ்விசேட சங்கங்களிலே நிறுவனங்களும் உறுப்பினர்களாக இடம்பெற வேண்டும். கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்திலே ஆரம்ப கூட்டுறவுச் சங்கத்துடன் தொழிலாளர்களும் உறுப்பினர்களாக இருப்பர்.

### மூலதனம்

இத்தகைய கூட்டுறவு கைத்தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய மூலதனத்தினை கூட்டுறவுச் சங்கமும் மக்கள் வங்கியும் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்ப கூட்டுறவுச்

சங்கம் உற்பத்திப் பகுதியை தானே நேரடியாக நிருவகிக்கும் இடத்து வேண்டிய மூலதனத்தில் மூன்றில் ஒரு பங்கினை மக்கள் வங்கியிடமிருந்து கடனாகவும், மாவட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்து நன்கொடையாக மூன்றில் ஒரு பகுதியையும் தனது சொந்த நிதியிலிருந்து அல்லது மேலும் கடனாக மூன்றில் ஒரு பகுதியினையும் பெறும். விசேட கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை அவற்றிற்கு வேண்டிய மூலதனம் மாவட்ட அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படும். மூன்றில் ஒரு பங்கு நன்கொடையாகவும், மிகுதி மக்கள் வங்கியிடமிருந்து குறுகிய கால, நீண்டகாலக் கடன்களாகவும் கிடைக்கும். குறுகிய காலக் கடன் 8 வீத வட்டியுடன் கடன் வழங்கிய இரண்டாம் ஆண்டிலிருந்து திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும். நீண்ட காலக்கடன் 8 வீத வட்டியுடன் நான்காம் ஆண்டிலிருந்து திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உள்ளூர் மட்டத்தில் அமைக்கப்படுகின்றன. காரியாதிகாரிகளே அவற்றின் தலைவர்களாக இருக்கின்றனர். இச்சபை ஒவ்வொன்றிற்கும் ஏறத்தாழ 2 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பின்வரும் அடிப்படையிலே அப்பணம் பயன்படுத்தப்பட வேண்டும்.

கைத்தொழில் திட்டங்களுக்கு ரூபா 50,000 (25 வீதம்) விவசாயத்திட்டங்களுக்கு ரூபா ₹0,000 (35 வீதம்) வீடமைப்பு தொடர்பான கைத்தொழில்களிலும் உள்ளமைப்பு அபிவிருத்தியிலும் ரூ. 80,0ம0 (40 வீதம்) இச்சபைகளினால் மேற்கொள்ளப்படும் கைத்தொழில் திட்டங்கள் முதலில் எண்ண வடிவத்திலே சபைகளிடம் தோன்றுகின்றன. என்ன பொருட்கள் முக்கியமானவை அவற்றில் எவையெவை உள்ளூரிலே உற்பத்தி செய்யப்படலாம் என்றோ அல்லது நாட்டின் இயற்கை வளத்தையும், மூலப் பொருள்களையும் எப்படிப் பயன்படுத்துவது என்றோ அல்லது நாட்டிலே உற்பத்தியாகும் பொருட்களின் பாவனை எதிர்காலத்திலே பெருகுவதை எதிர்பார்ப்பதாகவோ இவ்வெண்ணம் அமையலாம்.

(வளரும்)

# பரீட்சை முடிவு

பொல்கொல்ல கூட்டுறவுக் கல்லூரியினுல் நடாத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர பரீட்சை (சாதாரண பிரிவு) யில் சித்தியடைந்த யாழ் கூட்டுறவுக் கல்லூரி மாணவர்கள்.

M. துரையப்பா, C. பரராஜசிங்கம், S. பாவதி, S. நகுலேஸ்வரன், C. குகநாதன், K. மகுமுடீன், V. முத்துராஜா, M. சரஸ்வதி, S. மகாலிங்கம், S. குணரத்தினம், V. வெங்கடாசல ஐயர், M. குலமணி, S. மகாலிங்கம், S. இராஜமலர், K. பத்மாவதி, T. அரிபரசாதன், L. அல்வேன் R கலா.

மறு நூன சித்தி

T. பரஞ்சோதி, S. உதயமலர்.

நூன சித்தி

K. கணேசன், இ. மணி, N. தேவநேசன், A. புவனேஸ்வரன், S. V. இராஜநாதன், T. ஆனந்தவேல், N. பாலகிருஷ்ணன், S தயாமணி, S. இராமகிருஷ்ணன், C. பொன்னம்பலம், S. சிவலிங்கம், R இராஜசேகரன், T. விக்னேஸ்வரன், S. தனபாலசிங்கம், S. தியாகராசா, N. நலநாதன், K. வித்தியசாகரன்.

(முற்றொடர்)

# விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதில் அரசாங்கத்தின் பங்கு

கலாநிதி J. M. குணதாச (விவசாய ஆராய்ச்சி நிலையம்)

மேலதிகங்களையும், தட்டுப்பாடுகளையும் கட்டுப்படுத்தும் வழிவகைகளைக் கண்டுபிடித்தலே எம்முள்ளே உள்ள பிரச்சினையாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி மொத்த உள்நாட்டுத் தேவைக்குக் கூடுதலாக இருக்கும் போது வரையறுப்பான மேலதிக நிலை நிலவுகின்றது. வளர்ச்சியுற்று வரும் நாடுகளைப் பொறுத்தவரை உள்நாட்டுத் தேவை வழக்கமாக மரபுவழி வந்த ஒன்றாகும். எனவே, தேவையைப்பெருக்கும் சாத்தியக் கூறுகள் அவ்வளவாகத் தென்படா. மேலும், வருமான மட்டங்கள் குறைவாக இருப்பதனால் அவை தேக்க நிலையில் உள்ளதனால் தேவைப் பெருக்கம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய மேலதிகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மூன்று வழிவகைகளை மேற்கொள்ளலாம்: (அ) வெளிநாட்டுச் சந்தைகளுக்கு சாத்தியக் கூறுகளை ஆராய்தல் (ஆ) உள்நாட்டுத் தேவையைப் பெருக்குவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி உள்நாட்டுச் சந்தை வாய்ப்புக்களைப் பெருக்குதல் (இ) உற்பத்தியைத் திட்டமிடுவதன் மூலமும், பதனிட்டுப் பேணி வைத்தல், களஞ்சியப் படுத்தல் மூலமும் பொருள் வழங்கிட்டைக் கட்டுப்படுத்துதல்.

வெளிநாட்டுச் சந்தைகளில் புகுதல் என்றால் அந்நியநாட்டு அரசாங்கங்களுடனும், தனியார் வர்த்தக முயற்சிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்துவது இன்றியமையாதது. இத்தகைய வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் மேலதிகங்களைச் சந்தைப்படுத்தக் கூடியதாக இருப்பதோடு தேவை பெருகின் வழங்கீட்டை மேலும் பெருக்கக் கூடியதாகவும் இருக்கும். நேர

டிப் பாவனைக்கும், கைத்தொழில் பாவனைக்குமாக தகரங்களில் அடைத்தல், நீர் அகற்றி பதனிடுதல் விளைபொருள்களைப் பதனிடுவதன் மூலம் இத்தகைய வாய்ப்புக்களைப் பெருக்கலாம். உள்ளூர் கைத்தொழில்கள் இம் மேலதிகப் பொருட்களைப் பயன்படுத்தலாம். மக்களின் வருமான மட்டத்தை உயர்த்துவதன் மூலம் உள்நாட்டுத் தேவையை ஊக்குவிக்கலாம். ஆனால், இதனோடு இறக்குமதி கட்டுப்பாடுகளையும் விதிக்க வேண்டி நேரிடும். குறுகிய கால நோக்கில் பார்க்குமிடத்து மானியங்கள் மூலம் வருமானத்தைப் பங்கீடு செய்யும் திட்டத்தால் இது சாத்தியமாகும். ஆனால், நீண்டகால நோக்கில் பார்க்குமிடத்து அபிவிருத்தித் திட்டங்களோடு தொடர்பான வேலைவாய்ப்புக்களை கூடுதலாக உருவாக்குவதன் மூலம் வருமானத்தை பங்கீடு செய்வதே நிலையான தீர்வாக இருக்கும். இவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படினும் குறிப்பிட்ட இடங்களிலும், நேரங்களிலும் ஏற்படும் மேலதிகங்களும், கட்டுப்பாடுகளும் ஒழிக்கப்படுமாயின் போக்குவரத்து, தொடர்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு செம்மையாக இயங்குதல் வேண்டும்.

மேலதிகங்களையும், தட்டுப்பாடுகளையும் கட்டுப்படுத்துவதற்கு உற்பத்தியைத் திட்டமிடுவதை இரு கோணங்களிலிருந்து நோக்கலாம்: வயலில் பயிரை விளைவித்தல்; அதனை விற்பனைக்காகச் சந்தைப் படுத்தும் நிலையமொன்றில் வைத்திருத்தல். முன்னையதைப் பொறுத்தவரை முன்கூட்டியே மிகக்கவனமாகத் தயாரிக்கப்பட்ட உற்பத்தித் திட்டத்திற்கு அமைவாக குறிப்பிட்ட வகைப் பயிர்களை மட்டுமே குறிப்பிட்ட அளவிலே விளைவிப்பதற்கு உற்பத்தியாளர் நல்கும் ஒத்துழைப்பிலேயே வெற்றி தங்கியுள்ளது. இது தொழில் நுட்ப விடயமாக இருப்பதனால் உற்பத்தியாளரின் ஒத்துழைப்புடன் தேர்ச்சி பெற்றவர்களே அதனைக் கையாளல் வேண்டும். அதனை உற்பத்தியாளன் பொறுப்பாக மட்டும் கருதி அவர்களிடம் முழுக்க முழுக்க விட்டு விடலாகாது. வெவ்வேறு பயிர்கள், கால் நடைகள் ஆகியவற்றிலே எவ்வெப் பகுதி சிறப்புத் தேர்ச்சி பெற

வேண்டும் என்பது பற்றி முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருக்கும். விற்பனையைச் சார்ந்த உற்பத்தியைப் பொறுத்தவரை எதிர்காலத்திற்கு வேண்டிய கையிருப்புக்களைச் சேமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல், குளிரூட்டுவதன் மூலமும், பொருள்களைப் பேணிப் பாதுகாப்பதன் மூலமும் வேறுவழிகள் மூலமும் உற்பத்தி திட்டமிடப்படலாம். பிரதேச அல்லது உள்ளூர் மேலதிகங்களாலும், தட்டுப்பாடுகளாலும் ஏற்படும் சமநிலை இன்மைகளைச் சீர்படுத்துவதற்கு விநியோகத்தைத் திட்டமிடல் வேண்டும். மேலதிகங்கள் ஏற்படும் போது கொள்வனவு செய்யப்பட்டு பேணப்படும் கையிருப்புக்கள், தட்டுப்பாடுகள் ஏற்படும் காலங்களில் விற்பனை செய்யப்படலாம். இத்தகைய விடையங்கள் யாவும் அரசாங்கத்தினால்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். தொடக்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டதும் விவசாயிகள் மட்டத்தில் உற்பத்தியையும், சந்தைப்படுத்தலையும், பாதிக்கும் விடையங்கள் குறித்து நடவடிக்கைகள் எடுக்குமாறு சந்தைப்படுத்தல் கூட்டுறவுச் சங்கங்கள் பணிக்கப்படலாம்.

விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பொதுவாக அரசாங்கம் எவ்வாறு ஊக்கமளிக்கலாம் என்பதையும், குறிப்பாகக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக சந்தைப்படுத்துதலை மேற்கொள்வது பற்றியும் இக்கட்டுரைத் தொடரிலே அக்கறை செலுத்தப்பட்டது. விவசாயத்தில் ஈடுபடும் உறுப்பினர்களின் நன்மை கருதி சந்தைப் படுத்துதலை ஊக்குவிப்பதே சந்தைப்படுத்தல் கூட்டுறவுச் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். ஏன் விவசாயத்தில் ஈடுபடும் உறுப்பினர்களின் நலன் மட்டும் தான் பேணப்படுகின்றது பாவனையாளர்களினதும் சிறு வியாபாரிகளினதும் நலன்கள் ஏன் பேணப்படவில்லை என சிலர் வினவலாம். பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய அடிப்படை விளைபொருள் உற்பத்தியைப் பெருக்குவதே. அப்பொழுதுதான் விவசாயத்துறை தனக்குத் தானே ஆதாரமாக இருக்க முடியும். இதற்கு விவசாய உற்பத்தியாளரின் நலன்கள் முதலில் பேணப்பட வேண்டும்.

உற்பத்தியாளர் நலன்களுக்கும், பாவனையாளர் நலன்களுக்கு மிடையே முரண்பாடு ஏற்படுவது இயல்பு. விவசாய அபிவிருத்திக்கு வழிகோலுவது உற்பத்தியாளர்கள் அல்லாத சிறு வியாபாரிகளினது முயற்சிகள் அல்ல. உற்பத்தியாளரின் பங்களிப்பே. உற்பத்தியாளர் சிதறுண்டு பலமற்றவர்களாக இருப்பதனாற்றான் அவர்களது பலத்தைத் திரட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் தேவைப்படுகின்றன. எனவே, சந்தைப் படுத்துதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது உற்பத்தியாளரின் நலன்களை சந்தைப்படுத்துதல் கூட்டுறவுச் சங்கங்கள் புறக்கணிக்க முடியாது. மேலும், சந்தைப் படுத்துதல் என்னும் போது விளைபொருட்களை விற்பனை மட்டும் குறிப்பதன்று. விவசாயிகளுக்குத் தேவைப்படும் வேளாண்மை இடுபொருள்களை விற்பனை செய்வதும் சந்தைப் படுத்துதலில் அடங்கும்.

இந்நோக்குக் கோணத்திலிருந்து பார்க்கும் போது சந்தைப்படுத்துதல் கூட்டுறவுச் சங்கம் தனிப்பட்ட உற்பத்தியாளரோடும் அவர்களுடைய உற்பத்தித் தேவைகளோடு இணைப்பை ஏற்படுத்துவதோடு நேரடியாகவே மறைமுகமாகவோ கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது பொது நிறுவனங்கள் மூலம் பாவனையாளர்களுடன் இணைப்பையும் ஏற்படுத்துகின்றது. இத்தகைய இணைப்புக்கள் தனியார் வர்த்தக நிறுவனங்களில் ஏற்படுத்தப் பட்டிருப்பதையும் அவதானிக்கத் தக்கது.

(தொடர்ச்சி — 33 பக்கம்)

---

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு வசதியாக ஒரு வல்லுனரையும் எமக்கு அளித்துள்ளது. இவ் வல்லுனரின் அறிக்கை இப்பொழுது எமக்கு கிடைத்துள்ளது. சர்வதேசக் கூட்டுறவு இணைப்பு காப்புறுதிச் சங்கம் பதிவு செய்யப் பட்ட பின்பும் எமக்கு உதவி செய்வதாக வாக்களித்துள்ளது. இச் சந்தர்பத்தில் அவர்களுக்கு எமது நன்றியை நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(வளரும்)

# GOVERNMENT'S ROLE
## IN THE MARKETING OF AGRICULTURAL PRODUCE
## & ITS SUPPORT TO MARKETING COOPS

*By* Dr. J. M. GUNADASA
*(of the Agrarian Research Institute)*

(from the previous issue)

The problem then consists of finding out the means of regulating the absolute and relative surpluses and scarcities. The absolute surplus results when total domestic production is over and above total domestic demand. The domestic demand in developing countries is usually a traditional one. It is less dynamic as far as the possibilities of demand expansion are concerned. As the income levels are rather low and more or less stagnant, demand expansion is again restricted. In regulating supluses in a situation of this sort, three courses of action are available: (a) explore the possibilities of venturing into the export markets, (b) expand the capacity of the domestic market by creating conditions conducive to the expansion of effective demand and (c) regulate the supply itself by means of both production, planning and preservation and storage.

**Export market**

Venturing into export markets necessitates developing contacts with foreign governments and private business enterprises. Once such openings are found, they may be able to absorb surpluses and also stimulate further augmentation of supply to meet any more increases in demand. Such increases are possible by opening up opportunities for processing agricultural produce both for direct consumption and industrial use, e g., canning and dehydration etc. Then the surpluses could be absorbed by these local industries. Raising the income levels of the people is another way to stimulate domestic demand; but it may have to be supplemented with import restrictions. In the short-run, this is possible through a scheme of income distribution in the form of subsidies. But in the long-run a more sustaining solution lies in income distribution through the creation of more employment opportunities related to development projects. Even with these measures the relative surpluses and scarcities would not be eliminated unless transport and communication network is adequately developed and organized to function efficiently.

Production planning to regulate surpluses and scarcities can be considered from two angles; producing a crop

in the field and producing it at some marketing point for sale. In the former case, the success depends on the co-operation of the producers to agree to produce only the types of crops in amounts decided upon according to a certain carefully prepared production plan. This is of course a technical matter to be handled by skilled persons with the co-operation of the producers. It may not be left entirely as a task for the producers themselves. Decisions may have to be made regarding the areas that should specialize in the production of different crops and livestock. In the latter case, production for sale also could be planned out by making provision to hold buffer stocks, arranging for cold storage and other means of preservation. Planning out the distribution is also equally important to correct the imbalances resulting from regional or local surpluses and scarcities as and when they develop. Stocks so held on occasions of surplus, could be released for sale during slack seasons. All these are matters for a government to sponsor. Once initiated, marketing co-operatives could be called upon to implement the relevant matters affecting agricultural production and marketing at the farmer level.

(Continued)

---

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையான சந்தைப்படுத்துதல் ஊடகமாக கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குவதோடு அவை உறுப்பினர்களின் விளைபொருள்களுக்கு நியாயமான கவர்ச்சியான விலையையும். வழங்க வேண்டும். இதனை ஒரு கூட்டுறவுச் சங்கம் செய்வதென்றால் இரு நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும். (அ) கூட்டுறவுச் சங்கங்கள் பாவனையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். (ஆ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு உத்தரவாத கொள்விலைகள் இருத்தல் வேண்டும். பரந்துபட்டிருக்கும் பாவனையாளருடன் விவசாயின் மட்டத்திலுள்ள தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கம் நேரடித் தொடர்பு கொள்வது சாத்தியமல்ல. எனவே, வேறு கூட்டுறவுச் சங்கங்களின் உதவியுடன் பரந்துபட்ட விநியோக அமைப்பினை உருவாக்குவது அவசியமாகின்றது. இவ்விடையத்திலும் சந்தைப்படுத்துதல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் ஊக்குவிப்புக்களையாவது அளித்தல் வேண்டும்.

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு
மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| **நாடகம், நடனம்** | | |
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| | பகல் ,, ,, | 200-00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு ,, ,, | 175-00 |
| | பகல் ,, ,, | 150-00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் – பகல் அல்லது இரவு** | | |
| | முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **பிணை** | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7238

Published by the Jaffna District Committee, National Co-operative Council of SriLanka Ltd., (formerly known as the Northern Division Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the J. Municipality M.P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna (formerly North-ern Province Co-operative Printing and Publishing Society Ltd.)